03.06.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்: பாஜக வாக்குறுதி**

பிகாரில் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவோம் என பாஜக தெரிவித்தது. பாஜக ஆளும் சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இத்திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகுறித்து பிகார் மாநில பாஜக மூத்த தலைவர் சுஷில் குமார் மோடி, பாட்னாவில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது: எதிர்வரும் பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவை மக்கள் வெற்றி பெறச் செய்தால் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். குறுகிய காலக் கடனாக இருந்தாலும், நீண்டகாலக் கடனாக இருந்தாலும் எந்தவித வட்டித் தொகையும் வசூலிக்க மாட்டோம். ஆனால், கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு மட்டுமே மீண்டும் கடன் வழங்குவோம். மோசடிப் பட்டியலில் உள்ளவர்களுக்கு கடன் வழங்கப்படாதுஎன்றார் சுஷில் குமார் மோடி.

**சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் பல இடங்களில் புதன்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் வெப்பச்சலனத்தின் காரணமாக பல இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் தமிழகம், புதுவையின் பல இடங்களில் புதன்கிழமை மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம்

ராயக்கோட்டை, ஒசூரில் 60 மி.மீ. மழையும், தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் 50 மி.மீ. மழையும் பெய்துள்ளது. தளி, பென்னாகரம், தேவகோட்டை (40 மி.மீ.), ஊத்தங்கரை (30 மி.மீ.), மாரண்டஹள்ளி, கொடைக்கானல், தேவலா, தேன்கனிக்கோட்டை (20 மி.மீ.), வாடிப்பட்டி, கிருஷ்ணகிரி, மேட்டூர், பெரியகுளம், தருமபுரி (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**கிருஷ்ணா நதி நீர் நாளை தமிழகத்தை வந்தடையும்: அரசு அறிவிப்பு**

கிருஷ்ணா நதிநீர் வரும் வியாழக்கிழமை (ஜூன் 4) தமிழக எல்லையை வந்தடையும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

மேலும், தமிழகம் - ஆந்திர மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தின்படி, ஜூன் மாதம் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டியதில்லை என்ற போதும், முதல்வர் ஜெயலலிதா முயற்சியின் காரணமாக இப்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது. இது குறித்து, தமிழக அரசு செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: சென்னை மாநகரின் குடிநீர் தேவையை நிறைவு செய்வதில் ஆந்திரத்திலிருந்து பெறப்படும் கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற தண்ணீர் முக்கியப் பங்கு வகிக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் சென்னை மாநகருக்கு ஆண்டொன்றுக்கு 12 டி.எம்.சி. தண்ணீர் பெறப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, கடந்த ஆண்டு ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலத்துக்கு 8 டி.எம்.சி. தண்ணீரும், ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. தண்ணீரும் தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

ஆனால், இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் 20 வரையிலான காலத்தில் 1.738 டி.எம்.சி. அளவுக்கு மட்டுமே தண்ணீர் பெறப்பட்டுள்ளது.

ஜெயலலிதா நடவடிக்கை: முதல்வராக ஐந்தாவது முறை ஜெயலலிதா பொறுப்பேற்பதற்கு வழி ஏற்பட்டவுடன் ஆந்திர முதல்வர் சந்திரபாபு

நாயுடு, தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். அப்போது சென்னை மாநகரின் குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டு ஆந்திர மாநிலத்திலுள்ள கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றதை ஒட்டி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த போது, சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டியதன் அவசியத்தை ஜெயலலிதா வலியுறுத்தினார்.

இந்த வேண்டுகோளின் காரணமாக, ஜூன் 1 மாலையில் இருந்து ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து விநாடிக்கு 1000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் தமிழக எல்லையில் ஊத்துக்கோட்டை அருகே தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டிற்கு வரும் வியாழக்கிழமை (ஜூன் 4) வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏரிகளில் நீர் நிலவரம்: சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி நீர்த்தேக்கத்தில் 96 மில்லியன் கன அடியும், செங்குன்றம் ஏரியில் 996 மில்லியன் கன அடியும், செம்பரம்பாக்கம் ஏரியில் 565 மில்லியன் கன அடியும், வீராணம் ஏரியில் 1,270 மில்லியன் கன அடியும் நீர் இருப்பு உள்ளது.

**மீண்டும் உழவர் பெருவிழா: விவசாயிகள் கோரிக்கை**

விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும், வேளாண் நலத் திட்டங்களை விவசாயிகளுக்கு வழங்கவும் உழவர் பெருவிழாவை மீண்டும் நடத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள் தங்களது விளை பொருள்களை சந்தைப்படுத்தவும், தற்போதுள்ள விரிவாக்க முறையை முறைப்படுத்தி இரண்டாம் பசுமைப் புரட்சியின் இலக்கான "இடமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம்'

என்ற திட்டத்துக்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடனும் கடந்த 2012-இல் உழவர் பெருவிழா நடத்தப்பட்டது.

வட்டார வாரியாக ஒரு மாதம் நடந்த இந்த உழவர் பெருவிழாவில், விவசாயிகளின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்பட்டது.

மேலும், விவசாயிகளின் கிராமங்களுக்கு களப்பணியாளர்கள் சென்று வேளாண், தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான தொழில்நுட்ப முறைகளை வழங்குவர். பயிரின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் ஏற்படும் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு ஆலோசனைகள் வழங்கப்படும். பருவத்துக்கு ஏற்றபடி சாகுபடி செய்யும் பயிர்களில் கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்ப முறைகளை குழுவினர் செய்து காண்பிப்பர். முக்கியமான தருணங்களில், வேளாண் விஞ்ஞானிகளை வயல்களுக்கு அழைத்துச் சென்று இடர்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும். விவசாயிகளின் விளை பொருள்களை சந்தைப்படுத்துதல் குறித்த ஆலோசனைகளும் வழங்கப்படும். 15 நாள்களுக்கு ஒருமுறை வரும் களப்பணியாளர்களைத் தொடர்பு கொண்டு, சாகுபடி செய்யும் பயிர்களுக்கான தொழில் நுட்பங்கள், ஆலோசனைகளை வேளாண் துறையினரும், தோட்டக் கலைத் துறையினரும் வழங்கி வந்தனர். இந்த நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக உழவர் பெருவிழா நடத்தப்படவில்லை. இதனால், விவசாயிகளின் நிலங்களுக்கு களப்பணியாளர்கள் நேரடியாகச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், தண்ணீர்த் தேவை, மின்சாரத் தேவை, விவசாயப் பொருள்களின் விலை ஆகியவற்றுக்காக விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

விவசாயிகளின் குறைகளை நிவர்த்தி செய்ய உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த நிகழ்ச்சியை நடத்தவில்லை. தண்ணீர் சிக்கனம், விவசாய உற்பத்தியைப் பெருக்குதல் போன்றவற்றுக்காக மீண்டும் உழவர் பெருவிழா நடத்தப்பட

வேண்டும். மேலும், உழவர் பெருவிழா நடத்துவதன் மூலம் விவசாயிகளின் குறைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்றனர்.

எனவே, தமிழக அரசு உரிய ஆய்வு செய்து நிறுத்தப்பட்ட உழவர் பெருவிழாவை மீண்டும் நடத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மதுரையில் பரவலாக மழை**

மதுரையில் செவ்வாய்க்கிழமை இரவு திடீரென அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக காற்றுடன் மழை பெய்தது. மதுரையில் அக்னி நட்சத்திரம் தொடங்கியது முதலே அவ்வப்போது மழை பெய்தது. இதனால் வெப்பச் சூழல் மறைந்து குளிர்ந்த நிலையை மக்கள் அனுபவித்தனர். அவ்வப்போது ஆலங்கட்டி மழையும், காற்று, இடி மின்னலும் இருந்தன. கடந்த இரு நாள்களாக கடும் வெப்பம் நிலவியது. செவ்வாய்க்கிழமை பகலிலும் வெயில் கொளுத்தியது. இந்நிலையில் இரவில் திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. குளிர்ந்த காற்றுவீசிய நிலையில் நகரில் பரவலாக மழை பெய்தது.

**பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து முதல்போக பாசனத்துக்காக செவ்வாய்க்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. அணையிலிருந்து தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார். அதன்படி தேக்கடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தண்ணீர் செல்லும் மதகை தேனி மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் திறந்து வைத்தார்.

அணையிலிருந்து திறக்கப்பட்ட 200 கனஅடி தண்ணீரால் தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கில் பதிவு பெற்ற உத்தமபாளையம், போடி, தேனி ஆகிய வட்டங்களை சேர்ந்த 14,707 ஏக்கர் நிலம் பயன்பெறும், இந்த தண்ணீர் தொடர்ந்து 120 நாள்களுக்கு திறந்துவிடப்படும் என்று தேனி மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

**நம்பியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியத்தில் இயந்திரங்கள்**

நம்பியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானியத்தில் இயந்திரங்கள் வாங்கலாம் என வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து நம்பியூர் வேளாண் உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி கூறியதாவது: நம்பியூர் வட்டார விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்வதற்காக கீழ்க்கண்ட வகை இயந்திரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. 5 எச்.பி. குதிரைத் திறன் கொண்ட டீசல் எஞ்ஜின் இதன் முழு விலை ரூ.27,300. மானியம் ரூ.5000. இரண்டு இயந்திரங்கள் உள்ளன. நிலக்கடலை பறிக்கும் கருவி இதன் முழுவிலை ரூ.38,000 மானியம் ரூ.15,000. நிலக்கடலை காய் உடைக்கும் கருவி இதன் முழுவிலை ரூ.10,000 மானியம் ரூ.5,000.

இந்த இயந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகள் 04285-268138 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**நேரடி நெல் விதைப்பு செயல்முறை விளக்கம்**

ஆரணி வேளாண்மைத் துறை சார்பில், வேளாண் விரிவாக்கத் திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தில், நேரடி நெல் விதைப்பு முறை குறித்து விவசாயிகளிடையே செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் மூலம், ஆதனூர் பண்ணைப் பள்ளியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பத்தில் இரண்டாம் வகுப்பு விதை நேர்த்தி குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்காக முன்னோடி விவசாயி அக்கூர் ரவி, கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டு விதை நேர்த்தி, விதை விதைத்தல் ஆகியவை குறித்து செயல்விளக்கத்தின் மூலம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்து பயிற்சி அளித்தனர்.

வேளாண்மை அலுவலர் ஆனந்தன் விதை நேர்த்தியின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் நேரடி நெல் விதைப்பில் ஆள்கள், குறைந்த சாகுபடிச் செலவு உள்ளிட்டவை குறித்து விளக்கினார். தொழில்நுட்ப மேலாளர் ஆனந்த் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர் மட்டம் 72 அடியை எட்டியது**

மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதையடுத்து, அணையின் நீ ர் மட்டம் 72 அடியை எட்டியது. காவிரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு தொடர்ந்து அதிகரித்துள்ளது. செவ்வாய்க்கிழமை காலை நீர்

வரத்து 4,565 கனஅடியாக உள்ளது. நீர் வரத்து அதிகரித்துள்ளதால், மே ட்டூர் அணையின் நீர் மட்டம் 71.93 அடியாக உயர்ந்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்கு நெôடிக்கு 2000 கனஅடி வீதம் த ண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 34.37 டி.எம்.சியாக உள்ளது.

**வரத்துக் குறைந்ததால் அதிகரித்தது சின்ன வெங்காயத்தின் விலை**

திருச்சி காந்தி மார்க்கெட் வெங்காய மண்டிக்கு வெளி மாவட்டங்களிலிருந்து வரும் சின்ன வெங்காயத்தின் வரத்து கணிசமாகக் குறைந்ததால் அதன் விலை கிலோவுக்கு கணிசமாக உயர்ந்துள்ளது. இந்த நிலை இன்னும் 15 முதல் 20 நாள்கள் வரை நீடிக்கும் என்பதால் மேலும் விலை உயர்வதற்கான வாய்ப்புகளும் உருவாகியுள்ளன.

திருச்சி காந்தி மார்க்கெட் பகுதியிலுள்ள வெங்காய மண்டிக்கு திருப்பூர் மாவட்டம்,உடுமலைப்பேட்டை, பல்லடம் பகுதிகளிலிருந்தும், திருச்சி மாவட்டம், துறையூர், உப்பிலியபுரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளம் போன்ற பகுதிகளிலிருந்தும்

விற்பனைக்காக கொண்டு வரப்படுவது வழக்கம். வெங்காயத்தின் உற்பத்திக் காலம் 60 முதல் 70 நாள்கள் வரை என்பதால், இதற்கு என்று தனி சீசன் ஏதும் கிடையாது. உடுமலைப்பேட்டை, பல்லடம் பகுதிகளிலிருந்து உற்பத்தியான சின்ன வெங்காயத்தின் வரத்து கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு அதிகமான நிலையில், தற்போது வரத்து கணிசமாகக் குறைந்துவிட்டது. 20 முதல் 25 வண்டிகளில் தலா 50 கிலோ கொண்ட 100 பைகள் வந்த நிலையில், தற்போது 10 முதல் 12 வண்டிகளில் மட்டும்தான் வெங்காய வரத்து உள்ளது.

வரத்து குறைவுக்கு காரணம் என்ன: உடுமலைப்பேட்டை, பல்லடம் பகுதிகளில் பயிரிட்டப்பட்ட வெங்காயத்தின் விளைச்சல் இந்தாண்டு நன்றாக இருந்ததால், இவ்விரு வட்டங்களுக்குள்பட்ட அனைத்துப் பகுதிகளிலிருந்தும் திருச்சி மார்க்கெட்டுக்கு தொடர்ந்து இருந்ததால், கடந்த 25 நாள்களுக்கு முன்பு சின்ன வெங்காயத்தின் அதிகபட்சவிலேயே ரூ.20 ஆக இருந்தது. அல்லா பகுதிகளிலிருந்தும் வெங்காயத்தின் வரத்து தொடர்ந்து இருந்ததால் விலையில் மாற்றம் இல்லாமல் இருந்தது.

ஆனால், இடையில் பெய்த தொடர் மழையின் காரணமாக வெங்காயம் மழையில் சேதமடைதலும்,அழுகுதலும் ஏற்பட்டால் வரத்து குறையத் தொடங்கியது. ஒரே நேரத்தில் சின்ன வெங்காயத்தின் தேவை அதிகம் இருந்த நிலையில் வரத்து குறையத் தொடங்கியதால், விலையும் படிப்படியாக உயரத் தொடங்கியது என்கிறார் திருச்சி காந்தி மார்க்கெட வெங்காய மண்டி வியாபாரி ஏ. செல்வம்.

தற்போது 50 கிலோ கொண்ட மூட்டை சின்ன வெங்காயத்தின் விலை ரூ.1000 முதல் ரூ.2200 வரையிலான விலைகளில் வெங்காயத்தின் தரத்துக்கேற்ற வகையில் விற்பனையாகிறது. கிலோ வெங்காயம் தற்போது ரூ.20 முதல் ரூ.46 வரை விற்பனையாகிறது. ஆனால், கடந்த 25 நாள்களுக்கு முன்பு சின்னவெங்காயத்தின் அதிகபட்ச விலையே

ரூ.20முதல் ரூ.25 வரை தான் இருந்தது.உடுமலைப்பேட்டை, பல்லடம் பகுதிகளிலிருந்து விளைவிக்கப்பட்ட சி6ன்ன வெங்காயம் 90 சதவிகிதம் வரை விற்பனைக்கு வந்துவிட்ட நிலையில், 10 நாள்களுக்குப் பிறகு இப்பகுதியிலிருந்து வரத்து இருக்காது. அதன் பின்னர் மைசூர் பகுதிகளிலிருந்தும், அதனைத் தொடர்ந்து திருச்சி, பெரம்பலூர் மாவட்டப் பகுதிகளிலிருந்தும் சின்ன வெங்காயம் வரத்துதொடங்கிய பிறகுதான் விலை குறைய வாய்ப்பிருக்கிறது என்று மேலும் தெரிவித்தார் செல்வம்.

**எள் சாகுபடி அதிகரிக்க விவசாயிகளுக்கு ஆலோசனை: வேளாண் வல்லுநர்**

அரியலூர் மாவட்டத்தில் சாம்பல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தி, எள் சாகுபடி அதிகரிக்க ஆலோசனை தெரிவித்துள்ளார் சோழமாதேவி வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அரியலூர் மாவட்டத்தில் 2,220 ஏக்கர் பரப்பளவில் எள் சாகுபடி பயிரிடப்பட்டு வருகிறது. இதில்,மாசி பட்டத்தில் டி.எம்.வி 3,4,6,கோ 1,வி.ஆர்.ஐ 1 ஆகிய ரகங்களை விவசாயிகள் பயிரிட்டனர். இந்நிலையில், எள் சாகுபடியில் தற்போது பூக்கள் பூத்துக் காய்கள் தென்பட ஆரம்பித்துள்ளது. இதனிடையே, அண்மையில் பெய்த தொடர்

மழையால் பல்வேறு நோய் மற்றும் பூச்சித் தாக்குதலால் எள் மகசூல் இழப்பு ஏற்படும் நிலை உள்ளது. இதைக் கட்டுப்படுத்த,வயலில் முந்தைய பயிரின் கழிவுகளை அறவே நீக்கி சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், ஊடுபயிராக கம்பு (3:1) என்ற விகிதத்தில் பயிரிடலாம். கரையும் கந்தகத்தை 2 கிராம் தண்ணீரை 10 நாள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

இதனால்,காய்கள் மற்றும் தண்டு பாகங்கள் பழுப்பு நிறமாக மாறும். மேற்கண்ட அறிகுறிகள் தென்படும்போது அறுவடை செய்து விட வேண்டும். தவறினால், காய்கள் வெடித்து சிதறி மகசூல் இழப்பு ஏற்படும். எனவே, விவசாயிகள் மேற்கண்ட முறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் எள் சாகுபடியில் அதிக மகசூல் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தென்னையில் அதிக மகசூலுக்கு உரமிடுதல் அவசியம் : வேளாண் துறை யோசனை**

பொன்னமராவதி வட்டாரத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தற்போது பெய்து வரும் மழையைப் பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு உரமிடுவதன் மூலம் காய்கள் எண்ணிக்கையை அதிகரித்து கூடுதல் வருமானம் பெறலாம். இதுகுறித்து பொன்னமராவதி வேளாண் உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்தது: தென்னை மரங்களுக்கு நடவு செய்த ஓராண்டு முதல் உரமிடுவது அவசியம். நன்கு வளர்ந்த தென்னை மரம் ஒன்று ஆண்டுக்கு சராசரியாக 540 கிராம் தழைச்சத்து, 250 கிராம் மணிச்சத்து மற்றும் 820 கிராம் சாம்பல் சத்துகளை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்கிறது. தழைச்சத்து உரமிடுவது பெண் பூக்கள் உற்பத்தி அதிகரிக்கவும், மணிச்சத்து உரமிடுவது வேர் வளர்ச்சிக்கும், சாம்பல் சத்து உரம் இடுவது குரும்பை உதிர்வதை தடுக்கவும், கொப்பரை எடையை கூட்டி எண்ணெய் சத்து அளவினை அதிகரிக்கவும் உதவுகிறது. எனவே தென்னைக்கு உரமிட விரும்புவோர் மண் பரிசோதனை செய்து உரமிடலாம். மண் பரிசோதனை செய்ய முடியாதபட்சத்தில் பொதுப் பரிந்துரைப்படி ஆண்டுக்கு 2 தவணைகளாக ஜூன்-ஜூலை மற்றும் அக்டோபர்-நவம்பர் மாதங்களில் உரமிட வேண்டும். சராசரியாக 5 வருட வயதுள்ள ஒரு மரத்திற்கு தொழு உரம் அல்லது பசுந்தாள் உரம் 50 கிலோவும், யூரியா (தழைச்சத்து) 1300 கிராமும், சூப்பர் பாஸ்பேட் (மணிச்சத்து) 2000 கிராமும், மூரியேட் ஆப்

பொட்டாஷ் 2000 கிராமும், வேப்பம் புண்ணாக்கு 5 கிலோவும், தென்னை நுண்சத்து 1 கிலோவும், நுண்ணியிர் உரங்களான அசோஸ்பைரில்லம் (இதரவகை) 100 கிராமும், பாஸ்போபாக்டீரியா 100 கிராமும் இட வேண்டும். தென்னை மரங்களுக்கு இடுவதற்கு தேவையான நுண்ணுயிர் உரங்கள் பொன்னமராவதி வேளாண் விரிவாக்க மையத்தில் தற்போது விநியோகம் செய்யப்படுகிறது. எனவே தென்னை விவசாயத்தில் காய்ப்புத் திறனை அதிகரித்து கூடுதல் மகசூல் பெற்று அதிக வருமானம் ஈட்ட விரும்பும் விவசாயிகள் தென்னைக்கு உரமிட்டு பயனடைய வேண்டும்.

**பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான மருத்துவ முகாம்**

தஞ்சாவூர் அருகே ராஜேந்திரம் ஊராட்சிக்கு உள்பட்ட அரசூர் கிராமத்தில் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனம், காபி நிறுவனம் சார்பில் நடைபெற்ற இந்த முகாமில் 26 விவசாயிகள் பாதிக்கப்பட்ட பயிர்களின் மாதிரிகளைக் கொண்டு வந்தனர். இதில், பெரும்பாலான விவசாயிகள் பூ பூக்கும் தருணத்தில் மஞ்சள் தேமல் நோய் தாக்கப்பட்ட உளுந்து பயிர்களைக் கொண்டு வந்தனர். மேலும், பல்வேறு நோய்களால் பாதிப்புக்கு உள்ளான வாழை, கத்திரி, கனகாம்பரம் போன்ற பயிர் மாதிரிகளையும் கொண்டு வந்தனர்.

இந்தப் பயிர்களை எம்.எஸ். சுவாமிநாதன் ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த பயிர் மருத்துவர்கள் நுண்ணோக்கி மூலம் ஆய்வு செய்து பயிர்கள் என்னென்ன பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளன என்ற விவரத்தை அறிந்தனர். பின்னர், இந்த விவரங்கள் கையடக்கக் கணினியில் பதிவு செய்யப்பட்டன. இதையடுத்து, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பூச்சி, நோய், ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த பரிந்துரைகள் தமிழில் குறுஞ்செய்தி மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் செல்லிடப்பேசிக்கு அனுப்பப்பட்டன. படிக்கத் தெரியாத மற்றும் நவீன செல்லிடப்பேசி வசதி

இல்லாத விவசாயிகளுக்குக் காகிதத்தில் பரிந்துரைகள் எழுதி தரப்பட்டன என்றார் முகாம் ஒருங்கிணைப்பாளர் கே. ராஜ்குமார்.

**முதல்போக சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணை திறப்பு**

குமரி மாவட்டத்தில் முதல்போக சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து செவ்வாய்க்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

குமரி மாவட்டத்தில் முதல்போக பாசனமான கன்னிப்பூ சாகுபடிக்கு ஆண்டுதோறும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட அணைகள் திறக்கப்படுவது வழக்கம்.

நிகழாண்டில் பாசனத்துக்காக இந்த அணைகள் செவ்வாய்க்கிழமை திறக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி, மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன் சிங் ஆர். சவாண், பேச்சிப்பாறை அணையிலிருந்து காலை 10.30 மணிக்கு தண்ணீரைத் திறந்துவிட்டார்.

முன்னதாக, அணையின் அருகிலுள்ள பேச்சியம்மன் கோயிலிலும், அணையின் மதகிலும் சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. அணை திறந்ததும் பீறிட்டு வெளியேறிய புது வெள்ளத்தில் பூக்களையும், நெல் மணிகளையும் மாவட்ட ஆட்சியர் மற்றும் விவசாயிகள் தூவினர்.

79,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி: பின்னர் ஆட்சியர் கூறியதாவது: குமரி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பேச்சிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு 1, சிற்றாறு 2 ஆகிய அணைகளிலிருந்து கோதையாறு மற்றும் பட்டணம்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முதல்வர் ஆணை பிறப்பித்தார். அதன்படி, பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 200 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கோதையாறு மற்றும் பட்டணம்கால் அமைப்பில் உள்ள தோவாளைக் கால்வாய், நாஞ்சில்நாடு புத்தனாறு கால்வாய், பத்மநாபபுரம் கால்வாய் மற்றும் பட்டணம்கால்வாய் பாசனப்

பரப்பில் 79 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார் அவர்.

அணை திறப்பு நிகழ்ச்சியில், எம்.எல்.ஏ.க்கள் நாஞ்சில் முருகேசன், பச்சைமால், அதிமுக முன்னாள் மாவட்டச் செயலர் ஜான் தங்கம், கல்குளம் வட்டாட்சியர் சிந்து, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் எஸ்.கே. சுப்பிரமணி, உதவிச் செயற்பொறியாளர் ஏ. கிறிஸ்துநேசகுமார், உதவிப் பொறியாளர் பி மெல்கி சதேக், பட்டணம்கால் பிரிவு உதவிப் பொறியாளர் மைக்கேல் ராஜ், மாவட்ட பாசனத்தார் சபை தலைவர் வின்ஸ் ஆன்டோ, விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மருங்கூர் செல்லப்பா, புலவர் செல்லப்பா, பி. ஹென்றி, செண்பகசேகரன், பழனியாபிள்ளை, ராமதாஸ், சி. முருகேசன், குணசீலன், மக்கள் தொடர்பு அலுவலர் இளங்கோவன் மற்றும் வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் பங்கேற்றனர். நீர்மட்டம்: செவ்வாய்க்கிழமை நிலவரப்படி, பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 40.40 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 88 கன அடியாகவும், நீர்வெளியேற்றம் 200 கன அடியாகவும் இருந்தது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 72.62 அடியாகவும், சிற்றாறு 1 அணை நீர்மட்டம் 17.06 அடியாகவும், சிற்றாறு 2 அணை நீர்மட்டம் 17.16 அடியாகவும் இருந்தது. அணைகளில் மொத்த நீர் இருப்பு 6658.78 மில்லியன் கன அடியாக உள்ளது.

**காரைக்காலில் மண்புழு உரம் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்: நபார்டு அதிகாரி**

காரைக்கால் மாவட்டத்தில் மண்புழு உரம் உற்பத்தியை அதிகரிக்க, ஆத்மா குழுவினர் தீவிரம் காட்ட வேண்டும் என புதுச்சேரி நபார்டு வங்கி வட்டார மேம்பாட்டு மேலாளர் உமா குருமூர்த்தி கேட்டுக்கொண்டார்.

காரைக்கால் வேளாண் துறையின் அங்கமான வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆத்மா

குழுவினர் பல்வேறு வேளாண் உற்பத்தி, மண்புழு உரம் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். காரைக்கால் நல்லாத்தூர் பகுதியில் ரோஜா ஆத்மா குழுவினரின் செயல்பாடுகளை உமா குருமூர்த்தி செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார். அப்போது அவர் பேசுகையில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வேளாண் உற்பத்திப் பொருள்களை பெருமளவு உற்பத்தி செய்யவேண்டும். குறிப்பாக, மண்புழு உரம் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். சிறந்த செயல்பாடுகள் மூலம் குழுக்களுக்கு எளிதில் கடனுதவி கிடைக்கும். உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், சந்தைப்படுத்தவும் ஆத்மா அமைப்பினர், குழுவினருக்கு ஆதரவு தரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

கூடுதல் வேளாண் இயக்குநரும், ஆத்மா திட்ட இயக்குநருமான கா. மதியழகன், ஆத்மா திட்ட துணை இயக்குநர் ரா. முத்துக்கிருஷ்ணன், ஆத்மா வேளாண் அலுவலர் ப. அலன், இந்தியன் வங்கி செருமாவிளங்கை கிளை மேலாளர் சிவபுண்ணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆண்டு முழுவதும் ரோஜாக்களை ரசிக்கலாம்**

ஊட்டி:ஊட்டி, அரசு ரோஜா பூங்காவில், ஆண்டு முழுவதும் மலர்களை ரசிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு ரோஜா பூங்காவில், 4,000 வகையான ரோஜா செடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு கடந்த கோடை சீசனில், 4.10 லட்சம் பேர் பார்வையாளர்களாக வந்து சென்றுள்ளனர்.

தோட்டக்கலை அதிகாரி கள் கூறியதாவது:ஆண்டுதோறும், பிப்ரவரி மாதம், பூங்காவில் உள்ள ரோஜா செடிகள் கவாத்து செய்யப்படும். ஏப்ரல், மே மாதங்களில், அவை பூத்து குலுங்கும். ஆக., - செப்., மாதங்களில், மலர்களின் இதழ்கள் உதிர்ந்து விடும். கடந்தாண்டு, முதன்முறையாக, பூங்கா நிர்வாகம், ஆகஸ்ட் மாதமும் ரோஜா செடிகளை கவாத்து செய்தது. அந்த ரோஜா செடிகள், அடுத்த மூன்று மாதங்கள் வரை பூத்திருக்கும் என்பதால், ஆண்டு முழுக்க மலர்களை ரசிக்க முடியும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**முதல் போக நெல் சாகுபடிக்கு பெரியாறு அணையில் நீர்திறப்பு**




கூடலூர்:பெரியாறு அணையில் இருந்து, கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக, 200 கனஅடி நீர், நேற்று திறந்து விடப்பட்டது. தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில், 14,707 ஏக்கரில், நெல் முதல் போக சாகுபடிக்காக, நேற்று முற்பகலில், பெரியாறு அணையில் இருந்து, 200 கனஅடி நீர் திறக்கப்பட்டது. அணை நீர்மட்டம், 117 அடியாக இருந்தது. தேக்கடி வனத்துறை செக்போஸ்ட் அருகே உள்ள ஷட்டரில், தேனி கலெக்டர் வெங்கடாசலம், மதகை இயக்கி திறந்து வைத்தார்.

முன்னதாக, தேக்கடி ஆய்வாளர் குடியிருப்பு பகுதியில், துர்க்கையம்மன் கோவிலில், சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. அதன்பின், தமிழக பகுதிக்கு தண்ணீர் திறக்கும், 'ஷட்டர்' பகுதியில் சிறப்பு பூஜை நடத்தப்பட்டது. இஸ்லாம் மத விவசாயிகள் தொழுகை நடத்தினர்.

**திண்டுக்கல்லில் துவங்கியது: பன்னீர் கொய்யா சீசன்**




திண்டுக்கல்:கோவை, தர்மபுரி உள்ளிட்ட பகுதிகளில் மிததட்ப வெட்ப நிலையில் விளையும் பன்னீர் கொய்யா சீசன் திண்டுக்கல்லிலும் துவங்கியது.தமிழகத்தில் நீலகிரி, ஊட்டி தோட்டக்கலைத் துறை பண்ணை, திண்டுக்கல்லில் கொடைக்கானல், சிறுமலை, ஆடலுார், பன்றிமலை, தாண்டிக்குடி, தர்மபுரி பகுதிகளில் மித தட்ப வெட்ப நிலையில் விளையும் பயிரான பன்னீர் கொய்யா சீசன் துவங்கியுள்ளது.

பன்னீர் கொய்யா சாதாரண கொய்யப் பழத்தைவிட தோல்பகுதி வழவழப்பாக இருக்கும். பழத்தின் உட்பகுதியில் ஒரு விதை மட்டுமே இருக்கும்.அதை கீழே அகற்றிவிட்டு, பழத்தை தோலோடு சாப்பிடலாம். அதிக ருசி கொண்டது என்பதால், அணில், சிங்கவால் குரங்கு, மைனா, காகம், மரக்கொத்திப் பறவை உள்ளிட்ட விலங்கு, பறவைகள் இதனை விரும்பி சாப்பிடும்.ஆண்டுதோறும் மே துவங்கி ஆகஸ்ட் வரை பன்னீர்

கொய்யா சீசன் இருக்கும். விலை கிடைக்காததால் விவசாயிகள் அதிகளவில் இதை பயிரிடுவதை தவிர்க்கின்றனர். அதேநேரத்தில், அதிகப்படியான, ருசியும் நார்ச்சத்தும் நிறைந்துள்ளதால் விவசாயிகள் தங்களது தோட்டங்களில் குறைந்த அளவிலான மரங்களை மட்டுமே பராமரித்து வளர்க்கின்றனர். தற்போது பன்னீர் கொய்யா கிலோ ரூ.100 முதல் ரூ.112க்கு விற்பனையாகிறது.சிறுமலை விவசாயி சேசுராஜ் கூறியதாவது: கோடைக்காலம் முடியும் தருவாயில் பூப்பூத்து, ஜூன் மாத முதல் வாரத்தில் காய்கள் காய்க்க துவங்கும். அதிக ருசியானது. அதற்கேற்ப அதிக விலை கிடைக்காததால் சாகுபடி குறைந்துவிட்டது, என்றார்.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

சென்னை: வங்ககடலில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி தொடர்ந்து நீடித்து வருவதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முன்னதாக மதுரையில் நேற்றிரவு சுமார் ஒன்றரை மணி நேரம் இடியுடன் மழை பெய்தது. முன்னதாக கிருஷ்ணகிரிமாவட்டம் ஓசூரில் 6 செ.மீ அளவிற்கு மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் கேரளாவில் தென் மேற்கு பருவமழை வரும் 5-ம் தேதி துவங்க உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**விவசாயத்திலும் விஞ்ஞானி சாதனை**



ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து கரும்பு, நெல், பழம், மூலிகை பயிர், கால்நடை வளர்ப்பு, பண்ணை குட்டையில் மீன் மற்றும் கோழி வளர்த்து சிறந்த விவசாயியாக திகழ்கிறார் சிவகங்கை விஞ்ஞானி (ஓய்வு) கே.ரங்கராஜன். அவர் கூறியதாவது: சிவகங்கை அருகே சாலூரில் விவசாய குடும்பத்தில் பிறந்தேன். கேரள பல்கலையில் "மரைன் சயின்ஸ்'சில் முனைவர் பட்டம் பெற்றேன். விவசாய ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் செயல்படும் கொச்சி விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் (ஏ.ஆர்.எஸ்.,) 1964ல் முதன்மை விஞ்ஞானியானேன். இங்கு 37 ஆண்டு பணிபுரிந்து 2000ல் ஓய்வு பெற்றேன். எனக்கு 75 வயதானாலும் விவசாயத்தை மறக்கக்கூடாது என்ற நோக்கத்தில், அதில் கவனம் செலுத்தி வருகிறேன். விவசாயத்திலும் "விஞ்ஞானி': 2001ல் நாட்டரசன்கோட்டையில் 28 ஏக்கர் தரிசு நிலத்தை வாங்கினேன். அதை பண்படுத்தி திருந்திய நெல் சாகுபடி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் கோவையில் உள்ள கரும்பு இனப்பெருக்க நிலையம் கண்டறிந்த புதிய ரக கரும்பு சாகுபடி செய்துள்ளேன். இவை அதிக சர்க்கரை சத்துடன் 8 முதல் 10 அடி உயரம் வரை வளரும். இந்த ரகத்தில் கரணை போட்டு மேலக்காடு, திருவேலங்குடி மற்றும் சுற்றுப்புற விவசாயிக்கு நடவுக்காக

வழங்குகிறேன். இது தவிர மாம்பழ விளைச்சலும் உள்ளது. இங்கு 4 பண்ணை குட்டை மூலம் நீரை சேமித்து விவசாயம் செய்கிறேன். பண்ணை குட்டையில் கட்லா, ரோகு, மிர்கிலா, விறால் வகை மீன்களும் வளர்கிறது. பால் உற்பத்தி செய்யும் நோக்கில் பசு மாடுகள் மற்றும் கோழிகள் வளர்த்து ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து, "பன்முக விவசாயி' ஆனேன், என்றார்.

பணி காலத்தில் விஞ்ஞானி ஆனதோடுமட்டுமின்றி விவசாயத்திலும் சாதிக்கும் நோக்கில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்து "விவசாயத்திலும் விஞ்ஞானி' என பெயர் எடுத்துள்ளார். இவரை பாராட்ட 94427 22928.

**-என்.வெங்கடேசன், சிவகங்கை.**

## புழுதி நெல்லில் அறுவடைக் கரையான்

பொதுவாக மழைவளம் குறைவாக உள்ள பகுதியில் நேரடி விதைப்பாக நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அப்போது நேரடி புழுதி விதைப்பாக மழை பெய்வதற்கு முன்பே உழவு சாலில் நெல் விதைக்கப்படுகிறது. மழை பெய்தவுடன் அந்த ஈரப்பதத்தில் முளைக்க ஆரம்பிக்கும். அடுத்தடுத்து மழை பெய்யும்போது ஈரப்பதம் தொடர்ந்து கிடைக்கின்றது. ஆரம்ப கட்டத்தில் நெல் முளைத்து இருக்கும் சமயத்தில் மழை பெய்வது தாமதமாகும் சமயத்தில் தரைக்கடியில் வாழும் அனகாந்தோ டெர்மிஸ் என்னும் அறுவடைக் கரையான்கள் நெற்பயிரை பெருமளவில் தாக்கி சேதம் விளைவிக்கின்றன.

பயிரை அறுவடை செய்வது போல கரையான்கள் நெற்பயிரை வெட்டி சிறு துண்டுகளாக்கி கூட்டிற்குள் எடுத்துச்சென்று விடுவதால் அறுவடைக் கரையான்கள் எனப்பெயர் பெற்றது. நெல் வயலில் ஆங்காங்கே சிறுசிறு மண்குவியல் போல அறுவடைக் கரையான் புற்று காணப்படும். அறுவடைக் கரையானின் புற்றை சுற்றி 25 மி.மீ. உயரம் கொண்ட சிறிய மண் குவியல் இருக்கும். புற்று சுமார் 1மீட்டர் அகலமும், 8 மீ ஆழம் வரை இருக்கும். கரையான் கூட்டத்தில் ராஜா, ராணி கரையான்கள்

இனப்பெருக்கத்திற்காகவும், வேலைக்கார கரையான்கள் மற்ற வேலைகளை செய்வதற்கு அதனுடைய கட்டமைப்பாக உள்ளது. நெற்பயிரில் நேரடி புழுதி விதைப்பு செய்த வயலில் வறட்சியினால் ஈரப்பதம் குறையும் சமயங்களில் தரைக்கடியில் இருந்து வெளிவரும் கரையான் நெற்பயிரை வெட்டி கீழே தள்ளி சிறு சிறு துண்டுகளாக்கி தன் கூட்டிற்கு எடுத்துச் சென்று விடும். பயிரை வெட்டுவது முதல் அதை எடுத்துச் செல்வது வரை அனைத்தும் மிக வேகமாக நடைபெறும். இக்கரையான்கள் ஓரிரு நாட்களில் ஒரு ஏக்கர் நெல் பயிரை வெட்டி வீழ்த்தக்கூடிய தன்மையுடையது. இயந்திர நடவு செய்வதற்காக தயார் செய்யும் பாய் நாற்றங்காலிலும் அறுவடைக் கரையான் தாக்குதல் காணப்படும்.

கட்டுப்பாடு முறைகள்: அறுவடைக் கரையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த கடைசி உழவின்போது குயினல்பாஸ் 1.5 சதம் தூள் மருந்தை ஏக்கருக்கு 6 கிலோ என்ற அளவில் மண்ணில் இட வேண்டும். எக்டருக்கு 50 கிலோ குயினால்பாஸ் 1.5 சத தூளை சிறுசிறு துண்டுகளாக வெட்டப்பட்ட 50 கிலோ வைக்கோலுடன் கலந்து வயல் முழுவதும் இட வேண்டும். ஐந்து சதம் வேப்பங்கொட்டைச்சாறு கரைசலை தெளித்தும் கட்டுப்படுத்தலாம் (5 கிலோ வேப்பம் பருப்பை நன்றாக இடித்து தூளாக்கி ஒரு சாக்கு துணியில் ஒரு முடிச்சாகக் கட்டி 100 லிட்டர் தண்ணீரில் சுமார் 8 மணி நேரம் வரை வைக்க வேண்டும். பின்னர் சாக்குப்பையினை பிழிந்து வேப்பங்கொட்டை சாறுடன் தூளாக்கிய காதி சோப்பு 300 கிராமை கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் தேவைப்படும்).

**-பே.இந்திராகாந்தி**

**வேளாண்மை துணை இயக்குநர்,**

**விநாயகபுரம்.**

**சின்ன சின்ன செய்திகள்!**



சிறுதானிய மதிப்பூட்டும் இயந்திர மையம்: சிறுதானியங்களை அறுவடை செய்தவுடன் அதிலுள்ள சிறு சிறு கற்கள், மண்களை அகற்றுவது மிகவும் அவசியம். இதற்காக பல புதிய கருவிகளை கண்டுபிடித்துள்ளார்கள். சிறுதானிய உமி நீக்கி இயந்திரம்: சுத்தம் செய்த சிறு தானியத்தை அப்படியே உணவுக்கு பயன்படுத்த முடியாது. இந்த புதிய கருவியைக் கொண்டு சிறுதானியத்தில் உள்ள உமியை நீக்கி சுத்தமான சிறுதானிய அரிசியைப் பெறலாம். சிறுதானியத்தில் உள்ள கல், மண் ஆகியவற்றை அகற்றுவதற்கான புதிய கருவியை வெளியிட்டுள்ளார்கள். இதில் அறுவடை செய்த தானியத்தை கொட்டினால் இயந்திரம் மூலம் தானியத்தில் உள்ள சிறு கற்கள், குருணைகள், மண் தூள்கள் ஆகியவற்றை அகற்றி விட்டு சுத்தமான சிறுதானியத்தைப் பெறலாம். சிறுதானிய மாவு அரைக்கும் இயந்திரம்: சிறுதானிய அரிசியிலிருந்து சிறுதானிய சத்துமாவு தோசை மாவு, லட்டு போன்றவற்றை தயாரிக்க சிறுதானிய அரிசியை அரைக்க வேண்டும். இதற்கு சாதாரண அரைக்கும் இயந்திரமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சிறுதானிய கருவிகளை ஒரு யூனிட்டில் பொது இடங்களில் பொருத்தி இளைஞர்களை இதை ஒரு சுயவேலைவாய்ப்பாக அமைத்துக் கொள்ள

நல்ல வாய்ப்பு உள்ளது. இதற்காக அனைத்து வேளாண் அறிவியல் நிலையங்களிலும் இயந்திர செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. தகவல் : முனைவர் நா.ஸ்ரீராம், முனைவர் கு.மகேந்திர குமார், வேளாண்மை அறிவியல் நிலையம், அந்தியூர், சேலம்-636 204. தொலைபேசி : 0424 - 242 2550. நீங்களும் ஒருநாள் விவசாயி ஆக வேண்டுமா: விவசாயத்தைப் பற்றி அரிச்சுவடி கூட தெரியாது. ஆனால் விவசாயத்தை நேசிக்கிறேன். விவசாயத்தைக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன் என்ற எண்ணம் உள்ளவரா நீங்கள். உடனே 044 - 6680 2927 என்ற எண்ணுக்கு அழைத்து, குரல் வழி சேவை மூலம் உங்கள் பெயர், படிப்பு, செய்யும் தொழில், ஊர், மாவட்டம் உள்ளிட்ட விபரங்களைப் பதிவு செய்யுங்கள். மாணவர், வேலை தேடிக் கொண்டிருப்பவர் அரசு ஊழியர், ஆசிரியர், டாக்டர், இன்ஜினியர், ஐடி ஊழியர் என்ற எந்தத்துறையைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்கலாம். தேர்ந்தெடுக்கப்படுபவர்களை ஒருநாள் விவசாயியாக அனுபவங்களைப் பெற பண்ணைகளுக்கு அழைத்துச் செல்ல காத்திருக்கிறார்கள். தொடர்புக்கு : ஜானகிராமன், அலைபேசி: 91500 09998. நெல் நாற்று வளர்க்கும் தட்டு: நெல் விவசாயத்தில் ஒரு புரட்சியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது ஜப்பான் தொழில்நுட்பத்தில் குறைந்த விலைக்கு விவசாயங்களுக்காகவே தயாரிக்கப்படுகிறது. மிக குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்கள். தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் விபரங்களுக்கு : ""ஆப்பிள்இன்டெக்ஸ், ஆர்.ரமணக்குமார் எம்.பி.ஏ. 14, டாக்சர் சந்து நடு குஜிலித்தெரு, மேலபுலிவார் ரோடு, திருச்சி-620 008, பஸ் ஸ்டாப் மரக்கடை. அலைபேசி: 94437 37232, 90470 06075, போன் : 0431 - 406 0400.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் பண்ணைக்காடுகள் திட்டம் : குறைந்த பட்சம் 1 ஏக்கர் நிலம் தேவை. தரமான குளோனல் நாற்றுகள் விவசாய நிலங்களுக்கே மானிய விலையில் விநியோகம். இலவச தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் உறுதியான சந்தை வாய்ப்பு வரப் பேரம் ஓரிரண்டு வரிசைகளில் சவுக்கு, தைல மரங்களைப் பயிரிடலாம். மேலும் விபரங்களுக்கு : வீரிய நாற்றுப்பண்ணை, வனத்தோட்டத்துறை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், காகிதபுரம்-639 136, கரூர் மாவட்டம். அலைபேசி : 94425 91412, 94425 91417.
**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**விஸ்வரூபம்! , காய்கறி விலை உயர்வு , மிரண்டு ஓடும் மக்கள்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதியில், திடீரென பல மடங்கு உயர்ந்துள்ள காய்கறி விலை பொதுமக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விளைச்சல் பாதித்து, வரத்து குறைந்தும், தேவை அதிகரித்தும் இருப்பதால், இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

விவசாயத்தை ஆதாரமாகக்கொண்ட பொள்ளாச்சி பகுதியில், தென்னை பிரதான பயிராக இருந்தாலும், கணிசமான அளவு காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. அங்கு விளைந்த காய்கறிகள், பொள்ளாச்சியில் உள்ள காந்தி மார்க்கெட் உள்ளிட்ட பல்வேறு சந்தைகளில் விற்பனைக்கு வருவது வழக்கம். இங்கிருந்து காய்கறி கடைகளுக்கும், டிபார்ட்மென்ட் ஸ்டோர் களுக்கும் விற்பனைக்கு செல்கின்றன. இங்கு விளையாத கேரட், பீட்ரூட் உள்ளிட்ட சில காய்கறிகள், நீலகிரி மலைப்பகுதியில் இருந்தும், ஒட்டன்சத்திரம் சந்தையில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெரும்பாலான காய்கறிகள், திடீரென பல மடங்கு விலையுயர்ந்துள்ளன. கடந்த வாரம், 30 ரூபாய்க்கு விற்பனையான சின்ன வெங்காயம், நேற்று, 45 ரூபாய்க்கு

விற்பனையானது. இதே போல 40க்கு விற்ற காலிபிளவர் 80க்கும், 20க்கு விற்ற வெள்ளை முள்ளங்கி 48க்கும், 12க்கு விற்ற புடலை 36க்கும், 32க்கு விற்பனையான பீர்க்கன் 48க்கும், 20க்கு விற்பனையான பீட்ரூட் 40க்கும் உயர்ந்துள்ளது. இதே போல முருங்கை 60லிருந்து 100க்கும், வெண்டைக்காய் 20லிருந்து 40க்கும், அவரைக்காய் 48லிருந்து 80க்கும், பீன்ஸ் 60லிருந்து 80க்கும் கேரட் 32லிருந்து 48க்கும், பாகற்காய் 32லிருந்து 40க்கும், கத்தரிக்காய் 24லிருந்து 40க்கும் உயர்ந்தது. தமிழகமெங்கும் பருவம் தவறி கடந்த மாதம் முழுக்க பெய்த மழையால், பெரும்பாலான காய்கறி பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும், இதனால் காய்கறி வரத்து முற்றிலும் குறைந்து விட்டதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். அதே சமயம், அக்னி நட்சத்திரம் முடிந்து, தற்போது திருமண முகூர்த்தங்கள் நடைபெற்று வருவதால், காய்கறிகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, வரத்து இன்றியும், தேவை அதிகரித்தும் உள்ளதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, நடுத்தர மக்கள் அன்றாட சமையலுக்கு காய்கறி வாங்கவே தயங்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## பசுந்தேயிலையை முழுமையாக கொள்முதல் செய்தால் நஷ்டமில்லை

கோத்தகிரி: 'தோட்டங்களில் விளைந்துள்ள அறுவடைக்கு உகந்த பசுந்தேயிலையை, தொழிற்சாலைகள் முழுமையாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. நீலகிரி பசுந்தேயிலை ஏஜன்ட்கள் நலச்சங்க தலைவர் சிலாக்கியம் துரை, தேயிலை வாரியத்திற்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு: நீலகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு, வழக்கத்திற்கு மாறாக, ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், தேயிலை தோட்டங்களில், பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. விவசாயிகளின் பொருளாதாரமே தேயிலை விவசாயத்தை நம்பியுள்ள

நிலையில், பசுந்தேயிலைக்கு, ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சி, தொடர்ந்து வருகிறது. ஒரு கிலோ பசுந்தேயிலை பறிப்பதற்கு, 5 ரூபாயும், கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டுச்செல்ல,தூக்கு கூலியாக, ஒரு ரூபாயும் செலவாகிறது. ஆனால், ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு, 8 ரூபாய் சராசரி விலை கிடைக்கிறது. இந்த விலையை வாங்கி, விவசாயிகள் தோட்டங்களை பராமரித்து, கூலி கொடுக்கவே முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், பல தொழிற்சாலைகள் கொள்முதலையே நிறுத்தியுள்ளன. இதனால், அறுவடைக்கு தயாரான பசுந்தேயிலை தேயிலை தோட்டங்களிலேயே 'கரட்டு' இலையாக மாறி வருகிறது. தேயிலை விலை வீழ்ச்சியால், பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் தங்களது குழந்தைகளின் கல்வி செலவுக்காக, திண்டாடிவருகின்றனர். எனவே, தோட்டங்களில் அறுவடைக்கு உகந்த பசுந்தேயிலையை, தொழிற்சாலைகள் முழுமையாக கொள்முதல் செய்யும் வகையில், தேயிலை வாரியம், நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு, சிலாக்கியம் துரை கூறியுள்ளார்.

## பயிர்களின் தோல்களை நீக்க ஆலை தேவை அரசுக்கு விவசாயிகள் வலியுறுத்தல்

தர்மபுரி: சிறு தானிய பயிர்களின் தோல்களை நீக்க, விவசாயிகள் பங்களிப்புடன், ஆலைகள் அமைக்க, அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்டது. இம்மாவட்டம், மாநில அளவில், கேழ்வரகு, சாமை, சோளம் உள்ளிட்ட சிறுதானிய பயிர் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, மாவட்டத்தில் அதிகபட்சமாக, கேழ்வரகு, சாமை, சோளம், கம்பு உள்ளிட்ட சிறுதானிய பயிர்கள், 70 ஆயிரம் ஹெக்டர் பரப்பில், சாகுபடி செய்யப்படுகிறது.

ஆண்டு தோறும், இரண்டு லட்சம் டன்னுக்கு மேல், சிறுதானிய பயிர்கள் மூலம் மகசூல் கிடைக்கிறது. ஆனால், மாவட்டத்தில் சிறுதானிய தோல்களை நீக்குவதற்கு, இயந்திரங்கள் இல்லாத நிலை உள்ளது. இதனால், விவசாயிகள், சிறுதானியங்களில் இருந்து தோல்களை நீக்க, தேனி மாவட்டத்தில் உள்ள சிறுதானிய தோல் நீக்கி ஆலைகளுக்கு கொண்டு செல்ல வேண்டிய, பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், சமதளமான நிலப்பகுதி மிகவும் குறைவு. இதனால், இப்பகுதிகளில் அதிக அளவு, சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில், 20 ஆயிரம் ஹெக்டர் சாகுபடி செய்யப்படும், நெல் தோல்களை நீக்க, அதிக ரைஸ் மில்கள் உள்ளன. ஆனால், 70 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி செய்யப்படும், சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தர்மபுரி மாவட்டத்தில் குறிப்பிட்ட அளவிலான தொழிற்சாலைகள் இல்லாமல் உள்ளது. இதனால், விவசாயிகள் சிறுதானிய பயிர்களின் தோல்களை நீக்க, தேனி மாவட்டம் உட்பட தென் மாவட்டங்களுக்கு எடுத்து செல்ல வேண்டி உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு, கால விரயம், கூடுதல் செலவு ஏற்படுகிறது. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்டுள்ள இடைத்தரகர் சிலர், விவசாயிகளிடம், சிறுதானிய பயிர்களை, குறைந்து விலைக்கு மொத்தமாக வாங்கி செல்கின்றனர். இவ்வாறு, இடைத்தரகர், சிறுதானிய பயிர்களை, விவசாயிகளிடம், குறைந்த விலைக்கு வாங்கி, தேனி மாவட்டத்துக்கு, வாகனம் மூலம் எடுத்து சென்று, தோல்களை நீக்கி, அதிக விலைக்கு விற்று, லாபம் பார்க்கின்றனர்.

எனவே, தமிழக அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம், விவசாயிகளின் நலன் கருதி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள, எட்டு யூனியன்களிலும், விவசாயிகள் பங்களிப்புடன், சிறுதானிய, தோல் நீக்கும் ஆலைகளை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தோல் நீக்கிய சிறுதானிய

பயிர்களை விற்பனை செய்ய, அரசு விற்பனை மையம் துவங்க வேண்டும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

**விவசாயத்துக்காக குமரி மாவட்ட அணைகள் திறப்பு**

நாகர்கோவில் : கன்னிப்பூ விவசாயத்துக்காக குமரி மாவட்டத்தில் அணைகள் அனைத்தும் நேற்று திறக்கப்பட்டது. குமரி மாவட்டத்தில் கன்னிப்பூ, கும்பப்பூ என இரண்டு போக சாகுபடிகள் நடைபெறுகிறது. ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழையை பயன்படுத்தி, நடைபெறும் சாகுபடி பணிகள் கன்னிப்பூ என்று அழைக்கப்படுகிறது. இந்த பணிகள் தற்போது தொடங்கியுள்ளது. அக்னி வெயிலிலும் குமரி மாவட்டத்தில் இரண்டு வாரம் தொடர்ச்சியாக பெய்த பலத்த மழையால் மாவட்டத்தின் அணைகளான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளில் கணிசமான தண்ணீர் உள்ளது. ஜூன் முதல் வாரத்தில் தொடங்க வேண்டிய மழை தாமதமாகி கொண்டிருக்கும் நிலையில், கன்னிப்பூ சாகுபடி பணிகளுக்காக அணைகளை திறந்து விடும்படி முதல்வர் ஜெ., உத்தரவிட்டிருந்தார். அதன் படி முக்கிய அணையான பேச்சிப்பாறை அணையை நேற்று கலெக்டர் சஜ்ஜன்சிங்சவான் திறந்து வைத்தார். முன்னதாக அணையில் மலர் தூவி பூஜைகள் நடத்தப்பட்டது. இதில் எம்.எல்.ஏ.க்கள் பச்சைமால், முருகேசன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அணையில் இருந்து 200 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# நேதாஜி தினசரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை திடீர் உயர்வு



ஈரோடு,

ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் வரத்து குறைந்ததால் விலை உயர்ந்தது. ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.50–க்கு விற்பனையாகிறது. தினசரி மார்க்கெட்

ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் காய்கறிகள், பழங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஈரோட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த கடை வியாபாரிகள், பொதுமக்கள் மார்க்கெட்டிற்கு வந்து காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். இங்கு ஒட்டன்சத்திரம் பகுதிகளில் இருந்து காய்கறிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. பீட்ரூட், முட்டைகோஸ், காலிபிளவர், உருளைக்கிழங்கு போன்ற காய்கறிகள் ஊட்டி, தாளவாடி,

மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து ஈரோட்டிற்கு வருகிறது. காய்கறிகளின் வரத்து அதிகமாக இருந்ததால் விலை குறைவாக இருந்தது. இந்தநிலையில் கடந்த சில நாட்களாக ஈரோட்டிற்கு வரும் காய்கறிகளின் வரத்து குறைந்தது. இதனால் காய்கறிகளின் விலை சற்று அதிகரித்தது. <u>சின்ன வெங்காயம்</u>

இதுகுறித்து ஈரோடு நேதாஜி மார்க்கெட்டில் காய்கறி வியாபாரம் செய்யும் இப்ராகிம் என்பவர் கூறியதாவது:–

கடந்த 2 நாட்களுக்கு முன்பு சின்ன வெங்காயம் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டது. முகூர்த்த நாட்கள் அதிகமாக இருந்ததால் மார்க்கெட்டில் தேவையான அளவு சின்ன வெங்காயம் வரத்து இல்லை. வரத்து குறைந்ததால் விலை அதிகரித்தது. ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.50 வரை விற்பனை ஆகிறது. இதேபோல் பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூ.30–க்கு விற்பனையாகிறது.

கடந்த சில மாதங்களாக தேங்காய் விலை உயர்ந்து விற்பனையாகி வந்தது. இந்தநிலையில் தேங்காய்களின் வரத்து அதிகரித்ததால், விலை குறைந்து உள்ளது. ரூ.25–க்கு விற்பனையான பெரிய தேங்காய் ஒன்று ரூ.15–க்கு விற்பனையாகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

<u>விலை விவரம்</u>

ஈரோடு நேதாஜி தினசரி மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

(கிலோவில்...)

தக்காளி – ரூ.25

கேரட் – ரூ.40

பீன்ஸ் – ரூ.55

காலிபிளவர் – ரூ.50

முட்டைகோஸ் – ரூ.15

சின்ன வெங்காயம் – ரூ.50

பெரிய வெங்காயம் – ரூ.30

கத்திரிக்காய் – ரூ.25

வெண்டைக்காய் – ரூ.15

முருங்கைக்காய் – ரூ.80

நீர் பூசணிக்காய் – ரூ.18

சர்க்கரை பூசணிக்காய் – ரூ.15

உருளைக்கிழங்கு – ரூ.25

பச்சைமிளகாய் – ரூ.25

இஞ்சி – ரூ.80

**விவசாயிகளுக்கு ரூ.61¼ லட்சம் பயிர் காப்பீட்டு தொகை காமராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்**



வாய்மேட்டில் விவசாயிகளுக்கு ரூ.61¼ லட்சம் பயிர் காப்பீட்டு தொகையை காமராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்.

பயிர் காப்பீட்டு தொகை நாகை மாவட்டம் வாய்மேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 2013-14-ம் ஆண்டுக்கான பயிர்காப்பீட்டு தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த

நிகழ்ச்சியில் காமராஜ் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 965 விவசாயிகளுக்கு ரூ.61 லட்சத்து 32 ஆயிரம் பயிர் காப்பீட்டு தொகைக்கான காசோலையை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- வேதாரண்யம் தாலுகாவை சேர்ந்த ஆயக்காரன்புலம், தாணிக்கோட்டகம், வண்டுவாஞ்சேரி, மருதூர் தெற்கு, வாய்மேடு ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 2013-14-ம் ஆண்டு விவசாய பயிர்காப்பீட்டு திட்டத்தில் அப்பகுதியை சேர்ந்த 6 ஆயிரத்து 532 விவசாயிகள் பதிவு செய்து பிரிமிய தொகை செலுத்தி இருந்தனர். இவர்களுக்கு காப்பீட்டு தொகை வழங்க அரசு உத்திரவிட்டது. ரூ.2¾ கோடி : அதன்படி ஆயக்காரன்புலத்தில் 2 ஆயிரத்து 511 பேருக்கு ரூ.1 கோடியே 51 லட்சத்து 8 ஆயிரமும், தாணிக்கோட்டகத்தில் 372 பேருக்கு ரூ.14 லட்சத்து 21 ஆயிரமும், வண்டுவாஞ்சேரியில் 482 பேருக்கு ரூ. 22 லட்சத்து 17 ஆயிரமும், மருதூர் தெற்கில் 2 ஆயிரத்து 202 பேருக்கு ரூ.1 கோடியே 11 லட்சத்து 46 ஆயிரமும் என மொத்தம் 5 ஆயிரத்து 567 விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு தொகை ரூ.2கோடியே 98 லட்சத்து 92 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் வட்ட நிலவள வங்கி தலைவர் சிவானந்தம், தொகுதி இணை செயலாளர் ராதாகிருஷ்ணன், கூட்டுறவு வங்கி தலைவர்கள் ஜெகநாதன், முருகானந்தம், நெடுமாறன், இலக்குவன், அம்பலவாணன். ஒன்றியக்குழு உறுப்பினர் நடராசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் வீரமணி, வேதையன், வங்கி துணை தலைவர்கள் பார்த்தசாரதி, அசோகன், செங்குட்டுவன், வங்கி செயலாளர்கள் கலைமணிச் சேகர், மதியழகன், முருகையன், கோபிநாதன், மாணவரணி துணைச் செயலாளர் பிரபு,கூட்டுறவு கடன் சங்க இயக்குனர்கள், மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தரமற்ற விதையால் உற்பத்தி பாதிப்பு: கொய்மலர் சாகுபடிக்கு வாங்கிய வங்கி கடனை ரத்து செய்ய வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**




ஊட்டி,

தரமற்ற விதையால் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் கொய்மலர் சாகுபடிக்கு வங்கியில் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். விவசாயிகள் மனு : நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன், செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விவசாயிகள் மாவட்ட கலெக்டர் சங்கரை நேரில் சந்தித்து மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது:- நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தொடர் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதையடுத்து, கடந்த 2005-ம் ஆண்டு கொய்மலரை உற்பத்தி செய்ய தமிழக அரசு விவசாயிகளை ஊக்குவித்தது. மேலும், வங்கி கடன் உதவியையும் பெற்று தந்தது. நாற்றுக்கள் உற்பத்தி மையம்

ஆரம்ப காலத்தில் விவசாயிகளுக்கு நல்ல லாபம் தந்த கொய்மலர் சாகுபடி பின்னர் தரமற்ற நாற்றுக்கள், கொய்மலரை சந்தைப்படுத்த இயலாமை, இயற்கை சீற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கொய் மலரை சாகுபடி செய்து இருந்த விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டனர். எனவே இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணக்கோரி கொய் மலரை உற்பத்தி செய்து உள்ள விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தினோம். இதையடுத்து, தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்ய தும்மனட்டி அரசு பண்ணையில் கார்னேசன் மலர் நாற்றுக்கள் உற்பத்தி மையம் தொடங்கப்படும் என்று தமிழக அரசு கூறியது. மேலும், இந்த பணிகள் 6 மாதத்திற்குள் நடைபெற்று தரமான நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படும் என்று உறுதி அளித்தது. வங்கி கடனை ரத்து செய்ய வேண்டும் ஆனால் கடந்த 2½ ஆண்டுகள் ஆகியும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் கொய் மலர் சாகுபடி செய்து உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர். மேலும், மலர் சாகுபடிக்கு வாங்கிய கடனை செலுத்த முடியாத நிலையில் உள்ளோம். எனவே கொய் மலர் சாகுபடிக்காக வங்கியில் வாங்கியுள்ள கடன்களை முழுமையாக ரத்து செய்யவும், தரமான மலர் சாகுபடி செய்ய கொய் மலர் நாற்று உற்பத்தி மையம் தொடங்கவும் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

தினகரன்

**பருவமழையை எதிர்பார்க்கும் பள்ளத்தாக்கு விவசாயிகள்**

கம்பம், : முதல்போகத்திற்காக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்துள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில்

முல்லைப்பெரியாற்று பாசனம் மூலம் 14,707 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. முதல்போகத்திற்காக பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வழக்கமாக தென்மேற்கு பருவமழை ஜூன் முதல்வாரம் தொடங்கும். தற்போது கம்பம் பகுதியில் தென்மேற்கு பருவகாற்று வீசுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கேரளாவில் மழை பெய்தால்தான், தமிழகத்திலும் மழை தொடரும்.
கடந்த 3 தினங்களுக்கு முன் மூணாறு உள்ளிட்ட கேரள நகரங்களில் மழை பெய்தது. இது பருவமழை தொடங்குவதற்கான அறிகுறி என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், “தென்மேற்குபருவமழை தொடங்கினால்தான் விவசாயம் நல்லபடியாக நடக்கும். கேரளாவில் முன்கூட்டியே மழை பெய்வதற்கான அறிகுறி ஏற்பட்டுள்ளதால், தமிழகத்திலும் விரைவில் மழை தொடங்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. எனவே, தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்துள்ளோம்” என்றனர்.10 ஆண்டுகளுக்கு பிறகு 243.32 மி.மீ கோடைமழை பதிவு கரூர், : கடந்த 10 ஆண்டுகளில் இந்த கோடை காலத்தில்தான் கரூர் மாவட்டத்திற்கு அதிக மழை கிடைத்துள்ளது. கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.20 மி.மீட்டராகும். குளிர்கால மாதங்களான ஜனவரி, பிப்ரவரி, கோடை காலமான மார்ச், ஏப்ரல், மே மற்றும் தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய காலங்களில் இந்த சராசரி மழையை கரூர் மாவட்டம் பெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டின் சராசரி மழை பெய்யாமல் உள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும், பொதுமக்களும் கடுமையாக அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில், 2015ம் ஆண்டிலாவது ஆண்டின் சராசரி மழையைவிட அதிகளவு மழை பெய்யுமா? என அனைவரும் எதிர்பார்த்த நிலையில், எதிர்பார்த்த

அளவுக்கு மழை பெய்து கோடை வெப்பத்தை தணிக்க வைத்துள்ளது.

இதனடிப்பபடையில், கடந்த 2005ம் ஆண்டில் இருந்து 2015ம் ஆண்டு வரையிலான கோடைகால மழையில் இந்தாண்டுதான் அதிக மழையை இந்த மாவட்டம் பெற்றுள்ளது. இதன்படி, 2005ம் ஆண்டில் (மார்ச், ஏப்ரல், மே) 234.2மிமீ, 2006ம் ஆண்டில் 115.8மிமீ, 2007ம் ஆண்டில் 94.54மிமீ, 2008ம் ஆண்டில் 204.6மிமீ, 2009ம் ஆண்டில் 72.3மிமீ, 2010ம் ஆண்டில் 135,98மிமீ, 2011ம் ஆண்டில் 145.3மிமீ, 2012ம் ஆண்டில் 172.04மிமீ, 2013ம் ஆண்டில் 70.22மிமீ, 2014ம் ஆண்டில் 113.02மிமீ எனவும் இந்தாண்டின் கோடை காலத்தில் மட்டும் அதிகபட்சமாக 243.32மிமீ மழை பெய்துள்ளது.
ஆண்டின் துவக்கத்தில் சராசரி மழையான 652.20மிமீட்டரை எட்டும் அளவுக்கு கோடை காலத்தில் மாவட்டம் முழுதும் குறிப்பிட்ட அளவு மழை பெய்துள்ளதால் பொதுமக்கள் விவசாயம் உட்பட அனைத்து தொழில்களும் இந்தாண்டில் பரவலாக செழிப்புற நன்கு வாய்ப்புள்ளது எனவும் சந்தோஷமடைந்துள்ளனர். மேலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான தென்மேற்கு பருவமழை காலத்திலும், அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வடகிழக்கு பருவமழை சீசனிலும் அதிக மழை பெய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**கோடை உழவு செய்தால் விதை முளைப்புத்திறன் அதிகமாகி கூடுதல் மகசூல் பெறலாம் வேளாண் அதிகாரி ஆலோசனை**

தரங்கம்பாடி, : கோடை உழவு செய்தால் விதைமுளைப்புத்திறன் அதிகமாவதுடன் அதிக மகசூல் பெறலாம் என்று செம்பனார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் யோசனை தெரிவித்துள்ளார்.நாகை மாவட்டம் செம்பனார்கோவில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கோடை உழவினால் கடின மண்நயம் கொண்ட களிவாகு, வண்டல்

களிவாகு போன்ற நிலங்களில் ஏற்படும் நிலவெடிப்பு தவிர்க்கப்படும். மேலும் மண்ணின் ஈரப்பதம் ஆவியாகி விரயமாகாமல் காக்கப்படும். மண் வெடிப்பு தகர்க்கப்படுவதால் கோடை நீர் பாய்ச்சும்போது அதிகம் தண்ணீர் விரயம் ஆகாது. நடவுக்கும் நாற்றாங்காலுக்கும் செய்யப்படும் ஆரம்ப கட்ட உழவு சுலபமாகும். மண்ணின் நயமும் கட்டிகள் அமைப்பும் உடைக்கப்பட்டு மண்ணின் பௌதீக வளம் சீர் செய்யப்படுகிறது. மேல் மண் பொலபொல என ஆக்கப்படுவதால் விதை முளைப்புத்திறன் அதிகரிப்பதுடன் பயிரின் மகசூலும் கூடுதலாக கிடைக்கும். மண்ணின் நீர்பிடிப்பு தன்மை அதிகரிக்கப்படும். மண்ணில் உள்ள கூட்டுப் பொருட்கள் வெளியே கொண்டுவரப்பட்டு அவை இறந்துவிட வாய்ப்புள்ளது. களைகள் ஆரம்ப கட்டத்திலேயே அளிக்கப்படுகின்றன. மண்ணின் காற்றோட்டம் அதிகரிக்கப்படுவதால் பயிர் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும். மண்ணில் அங்கக பொருட்கள் மண்ணிலே மடிக்கப்படுவதால் மண்ணில் அங்கக வளம் கூடும். எனவே விவசாயிகள் கோடை உழவில் ஈடுபட வேண்டும். மணல் சாரி நிலங்கள், ஆற்றுப்படுகை நிலங்கள், களர், உவர் நிலங்களுக்கு கோடை உழவு ஏற்புடையதாக இருக்காது. இவ்வாறு வேளாண் அதிகாரி வெற்றிவேலன் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் பரவலாக மழை மானாவாரி சாகுபடி தீவிரம்**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் மழையால் மானாவாரி நிலங்களில் மானாவாரி பயிர் சாகுபடி சூடுபிடித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில் மே மாதத்தில் கிட்டத்தட்ட 15 நாட்கள் வரையிலும் பரவலாக மழை பெய்தது. கோடை சீசனில் எதிர்பாராமல் பெய்த மழையால் உற்சாகம் அடைந்த மானாவாரி விவசாயிகள் உடனடியாக கோடை உழவு மேற்கொண்டு நிலத்தை பண்படுத்தியதுடன், விவசாயப்பணிகளில் சுறுசுறுப்பு காட்ட துவங்கினர். நிலக்கடலை, சோளம், மக்காச்சோளம், ஆமணக்கு, எள் போன்ற

மானாவாரி பயிர்களின் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக கடந்த 3 ஆண்டுகளாக கோடை சீசனில் மழைப்பொழிவு இல்லாததால் மானாவாரி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.தற்போது பெய்துள்ள மழையால் புளியம்பட்டி, நம்பியூர், குருமந்தூர், அளுக்குளி, கவுந்தப்பாடி, தயிர்பாளையம், நசியனூர், அறச்சலூர், மொடக்குறிச்சி, கள்ளிப்பட்டி, பங்களாபுதூர், லக்காபுரம், எழுமாத்தூர், அவல்பூந்துறை போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் மானாவாரி பயிர் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. பொதுவாகவே மானாவாரி பயிர்கள் 3 முதல் 4 மாதங்களில் விளைந்து பலன் கொடுக்கும் என்பதாலும், குறைந்த செலவே ஆகும் என்பதாலும் மானாவாரியில் இதுவரை தரிசாக போட்டிருந்த விவசாயிகள் கூட தற்போது வேளாண் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளதால் கிராமப்பகுதிகளில் வேலைவாய்ப்பு குறைந்திருந்த விவசாய தொழிலாளர்களுக்கு தினமும் வேலை கிடைத்துள்ளதால் உற்சாகமடைந்துள்ளனர்.

**புதுவையில் 70 இடங்களில் பண்ணை குட்டை அமைப்பு நன்னீர் மீன்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்**

புதுச்சேரி குருமாம்பேட்டில் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் உள்ளது. இங்கு நன்னீர் மீன் வளர்ப்பு பயிற்சிக்காக ஒரு ஏக்கரில் மீன் வளர்ப்பு குளம், மீன் குஞ்சுகள் வளர்த்தெடுக்க 4 நாற்றங்கால் குட்டை மற்றும் நெற்பயிர் - மீன், கோழி வாத்துடன் மீன் வளர்ப்பு செயல் விளக்க கூடம், அலங்கார மீன்வளர்ப்பு பிரிவுகள் செயல்பட்டுவருகிறது. பயிற்சிக்கு வருபவர்களுக்கு கூட்டு மீன் வளர்ப்பு, மீன் குஞ்சுகள் உற்பத்தி மற்றும் நாற்றங்கால் பராமரிப்பு, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ◌ேமலும் மீன்களுக்கான தீவனங்கள் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து பயிற்சி அளிக்கின்றனர். கூட்டு மீன் வளர்ப்பில் இந்திய பெருங்கெண்டை மீன்களான கட்லா,

ரோகு, மிருகால் மற்றும் சீன நாட்டை சேர்ந்த வெள்ளிக்கெண்டை, புல்கெண்டை, சாதா கெண்டை ஆகிய 6 மீன்களை ஒரே சமயத்தில் வளர்க்கலாம். குளத்தில் இயற்கையாக கிடைக்கும் வெவ்வேறு உணவுகளை மீன்கள் பயன்படுத்திக்கொள்ளும். நெற்பயிருடன் மீன் வளர்ப்பு, கோழி வாத்துடன் மீன் வளர்ப்பு போன்றவை ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு என அழைக்கப்படுகிறது. கோழி, வாத்துக்களின் கழிவுகள் நேரடியாக குளத்திற்கு செல்வது போல் கூண்டுகள் அமைக்கப்படுகிறது. இந்த கழிவுகளை மீன்கள் உணவாக உட்ெகாள்கின்றன.

இதனால் மீன்களும் ஊட்டம் மிகுந்து காணப்படுவதுடன், தீவன செலவும் குறையும். விவசாயிகள் மீன் குஞ்சு உற்பத்தி பராமரிப்பது சிரமமான காரியமாக உள்ளது. இதற்காக வேளாண் அறிவியல் நிலையத்தில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்து, 45-60 நட்கள் வரை வளர்த்து விற்பனை செய்கின்றனர். மேலும் படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் துவங்கும் வகையில் அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சியளிக்கப்படுகிறது. அலங்கார மீன்களை எவ்வாறு பராமரிப்பது, என்ன மாதிரியான உணவுகளை மீன்களுக்கு வழங்கலாம் என்பது போன்ற ஆலோசனை வழங்குகின்றனர். இது இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதுதவிர மீன் வளர்ப்பு தொழிலில் ஈடுபடுபவர்கள் மீன்களுக்கான உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இதுகுறித்து மீன் வளர்ப்பு தொழில்நுட்ப வல்லுனர் திருமூலன் கூறுகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நிதியுதவியுடன் நன்னீர் மீன்வளர்ப்பு பயிற்சி 2 நாட்கள் நடத்துகிறோம். ஒரு பேட்ஜ் 25 பேர் என ஆண்டுக்கு 12 பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. இப்பயிற்சிக்காக சிலர் நேரடியாகவே வருகின்றனர். மேலும் சிலர்

மீன்வளத்துறை வழிகாட்டுதலுடன் வந்து செல்கின்றனர். இதேபோல் சமூக தொண்டு நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு இணங்க பல கிராமங்களுக்கு நேரடியாக சென்று மீன் வளர்ப்பு குறித்த பயிற்சியை விவசாயிகளுக்கு அளித்து வருகிறோம்.

மீன் வளர்ப்பு முகமை சார்பில் குளம் வெட்டுதல், இடுபொருள், குளத்தை பராமரித்தல் மற்றும் சீரமைக்க மானியம் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக மீன் வளர்ப்பு தொழில் விவசாயிகளிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. புதுவையில் பனையடிக்குப்பம், வில்லியனூர், தொண்டமாநத்தம், பாகூர், குருவிநத்தம், கூனிச்சம்பட்டு, சேந்தநத்தம், பூரணாங்குப்பம், மணப்பட்டு உள்ளிட்ட பல இடங்களில் 70 கூட்டு மீன் வளர்ப்பு தொழில் நடைபெற்று வருகிறது. அதிலும் பனையடிக்குப்பத்தில் மட்டும் 17 இடங்களில் கூட்டு மீன் வளர்ப்பு தொழில் நடந்து வருகிறது என்றார்.

புதிய தொழில் நுட்பத்தில் மீன்வளர்ப்பு: ஆந்திர விவசாயிகள் மீன் வளர்ப்பில் புதிய தொழில் நுட்பத்ைத கடைபிடிக்கின்றனர். அவர்கள் 2 சதுரமீட்டர் ஒரு மீன் என்ற விதத்தில் மீன்களை வளர்க்கின்றனர். இவ்வாறு வளர்ப்பதால் குளத்தில் உள்ள மீன்களுக்கான பெரும் அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் அவற்றின் வளர்ச்சி விகிதமும் குறைகிறது. சாதாரணமாக ஓராண்டுக்கு 1 கிலோ வரை வளர வேண்டிய மீன் 200 முதல் 300 கிராம் வரை வளர்கிறது. அதன்பின்னர், இந்த மீன்களை பரந்த நீர்பரப்பில் விடுகின்றனர். அப்போது மீன்கள் அதிகமான உணவுகளை உட்கொண்டு வேகமாக வளர்கின்றன.

இதன் காரணமாக அடுத்த ஓராண்டுகளில் ஒவ்வொரு மீன்களும் 4 முதல் 5 கிலோ எடை உடையதாக வளர்கிறது. இதனால் விவசாயிகளுக்கும் நல்ல வருவாய் கிடைக்கிறது. இந்த தொழில் நுட்பம் தற்போது புதுவை மற்றும் தமிழக பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுவை மற்றும் தமிழகத்தில் 1:1 என்ற கணக்கில் தவுடு, புண்ணாக்கு மீன்களுக்கு

உணவாக கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆந்திரா விவசாயிகள் 2:1 என்ற கணக்கில் தவிடு மற்றும் புண்ணாக்கை மீன்களுக்கு கொடுக்கின்றனர். இவ்வாறு புண்ணாக்கை அதிகமாக கொடுப்பதால் மீன்களின் உணவிற்கான செலவு குறைகிறது. மேலும் மீன்களுக்கு அசோலா கொடுப்பதன் மூலம் அதன் வளர்ச்சி விகிதம் மேலும் அதிகரிக்கும் என வல்லுனர்கள்கூறுகின்றனர்.